


# ஏற்றுமதி செயல்முறை












*Published by:* *Trade Facilitation & Trade Information Division* | Sri Lanka Export Development Board | 42, Navam Mawatha, Colombo 02, Sri Lanka
Tel : +94 (0)11 230 0705~11 | Fax : +94 (0)11 230 0715, 230 0676 | E-mail : tfti@edb.gov.lk | Web : www.srilankabusiness.com

## 1. ஏற்றுமதியாளராகப் பதிவுசெய்தல்

இலங்கையிலிருந்து வர்த்தகபெறுமதிமிக்க பண்டங்களை ஏற்றுமதிசெய்ய உத்தேசிக்கும் ஒருவர் கீழ் காணப்படும் நிறுவனங்களில் பதிவுசெய்யக் கோரப்படுகிறார்.

i. உள்நாட்டு இறைவரித் திணைக்களம்
(வரிஅடையாளஎண் / வற் எண்)
(http://www.ird.gov.lk/en/sitepages/default.aspx)

ii. இலங்கைச்சுங்கம்
(http://customs.gov.lk)

மேற்குறிப்பிட்ட நிறுவனங்களில் பதிவுசெய்வதற்கு, ஏற்றுமதியாளர் வியாபார பதிவுச்சான்றிதழ் அல்லது கம்பனியின் கூட்டிணைப்புச ் சான்றிதழ் மற்றும் அதுதொடர்பான ஆவணங்களின் மூலப்பிரதிகள் முழுமையாக நிரப்பப்பட்ட விண்ணப்பப்படிவங்களுடன் சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பப் படிவங்கள் மேற்கண்ட நிறுவனங்களிற் கிடைக்கும்.

## 2. ஏற்றுமதி செய்வதற்குபதிவு /அனுமதிப்பத்திரம் / சான்றிதழ்கள் பெறப்பட வேண்டிய பொருட்கள்

| இல. | பொருள் | பதிவுஅனுமதிப்பத்திரம் /அனுமதி /சான்றிதழ்கள் | அனுமதிப்பத்திரம் அல்லதுசான்றிதழிற்குப் பொறுப்பான அதிகாரநிறுவனம் |
|---|---|---|---|
| 1 | **தேயிலை** | தோகையான தேயிலைக்கு சராசரிஏலவிலை (AAP) சான்றிதழ்.<br><br>ஒவ்வொருகப்பற் தொகுதிக்கும் தரச்சான்றிதழ் | இலங்கைத் தேயிலைச் சபை |
| 2 | **வைரங்கள்,இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணங்கள்** | இரத்தினக ் கல் விற்பனையாளர்களுக்கான அனுமதிப்பத்திரம் | தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபை(NGJA) |
| 3 | **உணவுமற்றும் குடிபானங்கள்** | | |
| | **a. இறைச்சித் தயாரிப்புகள்** | ஒவ்வொரு கப்பற் தொகுதிக்கும் சுகாதாரச் சான்றிதழ்<br><br>பதனிடும் நிலையச் சான்றிதழ் ISO, HACCP அல்லது GMP (ஏதாவது ஒரு சான்றிதழ்) | பிராணி தனிமைப்படுத்தும் நிலையம், விலங்கு உற்பத்திமற்றும் சுகாதாரத் துறை<br><br>இலங்கைக் கட்டளைகள் நிறுவனம் |
| | **b. பியர்** | மதுவரித் தீர்வையுள்ள பண்டங்களை ஏற்றுமதி செய்வதற்கான அனுமதி | இலங்கை மதுவரித் திணைக்களம் |
| | **c. மதுபானங்கள்** | மதுவரித் தீர்வையுள்ள பண்டங்களை ஏற்றுமதிசெய்வதற்கான அனுமதி | இலங்கைமதுவரித் திணைக்களம் |
| | **d. மதுபானம் அல்லாதகுடிபானங்கள்(போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீர்/கனிமநீர்)** | ஏற்றுமதிக்கானஅனுமதி | சுகாதாரத் திணைக்களம் |

| | | | |
|---|---|---|---|
| | **e. முந்திரிப் பருப்பு** | கட்டாயமான முன் கப்பற் தொகுதி ஆய்வுச் சான்றிதழ்<br><br>புகையூட்டல் சான்றிதழ் (வாங்குவோரின் வேண்டுகோளிற்கு அமைவாக) | இலங்கைக் கட்டளைகள் நிறுவனம்(SLSI),தொழிற்துறை தொழினுட்பநிறுவனம்(ITI)<br><br>தேசியதாவர தனிமைப்படுத்தும் சேவை/ஏதாவதுஒருஅதிகாரமளிக்கப்பட்டதனியார் புகையூட்டல் கம்பனி |
| **4.** | **மசாலாமற்றும் தொடர்புடைய பொருட்கள்** | | |
| | **a. அனைத்துமசாலா** | உற்பத்தி நாட்டுச்சான்றிதழ் | வணிகத் திணைக்களம் /வர்த்தகச் சம்மேளனம் |
| | **b. கறுவா** | தூய இலங்கை கறுவாச் சின்னத்தை பாவிப்பதற்கான பதிவு<br><br>கட்டாயமானமுன் ஆய்வுச் சான்றிதழ் | இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச ் சபை<br><br>இலங்கைக் கட்டளைகள் நிறுவனம் (SLSI) /SGS Lanka Private Ltd |
| **5.** | **ஆயர்வேதம் மற்றும் மூலிகைப் பொருட்கள்** | | |
| | **a. பூர்த்தியாக்கப்பட்ட மூலிகைப் பொருட்கள்** | சுகாதார பராமரிப்பு தயாரிப்புகளாக உள்நாட்டுச் சந்தைக்கும் மற்றும ஏற்றுமதி செய்வதற்கும் சந்தைப்படுத்தலுக்கான அனுமதி | ஆயர்வேதத் திணைக்களத்தின் கீழ் நியமிக்கப்பட்ட மருந்து முறைப்படுத்தல் குழு |
| | **b. மூலிகை ஒப்பனைகள்** | துயாரிப ் பதற்கான பதிவு<br><br>தரம்/அறிமுகச் சான்றிதழ் | ஒப்பனை சாதனங்கள் மற்றும்மருந்து ஒழுங்குமுறை அதிகார சபை<br><br>தொழிற்துறை தொழினுட்ப நிறுவனம்(ITI), சுகாதாரத் திணைக்களத்தின் மருந்து மற்றும் ஒப்பனை தயாரிப்பு பிரிவு |
| | **c. மூலிகைத் தாவரங்கள்** | வணிக அளவில் மூல நிலையில் அல்லது உலர்த்திய நிலையில் ஆயர்வேதப் பொருட்கள் ஏற்றுமதி செய்வதற்கான அனுமதி | வன பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் ஆயர்வேதத் திணைக்களம் |
| **6** | **தெங்கு மற்றும் தெங்கு அடிப்படையிலான தயாரிப்புகள்** | உலர்த்திய தேங்காய்/உடனடி தேங்காய்/தென்னோலையிலான தயாரிப்புகளை ஏற்றுமதி செய்வதற்கான அனுமதி | தெங்கு அபிவிருத்தி அதிகார சபை (CDA) |
| **7** | **பழ வகைகள் மற்றும் மரக்கறி வகைகள்** | தாவர சுகாதாரச்(Phytosanitary) சான்றிதழ் | தேசிய தாவர தனிமைப்படுத்தும் சேவை |
| **8** | **கனிமங்கள்** | மூல நிலை மற்றும் பகுதியாக பூர்த்தியாக்கப்பட்ட நிலையிலுள்ள கனிமங்களிற்கான ஏற்றுமதிஅனுமதிப் பத்திரம் | புவிச் சரிதவியல் அளவை சுரங்க பணியகம் |
| **9** | **மரத்தயாரிப்புகள்** | | |
| | **a. மரக்குற்றிகள் மற்றும் அரியப்பட்ட பெறுமதி சேர்க்கப்பட்ட மர உற்பத்திகள்** | ஏற்றுமதிக்கான அனுமதிப் பத்திரம் | வன பாதுகாப்புத் திணைக்களம் |
| | **b. மர அடிப்படையிலான விளையாட்டுப் பொருட்கள் மற்றும் தளபாடங்கள்** | ஏற்றுமதிக்கான அனுமதி | வன பாதுகாப்புத் திணைக்களம் |
| **10** | **மீன் மற்றும் மீன்பிடித் தயாரிப்புகள்** | • கடல் அட்டை,சிங்க இறால்கள்மற்றும் சங்குகளின் ஏற்றுமதிக்கான அனுமதி<br>• ஐரோப்பிய ஒன்றிய நாடுகளிற்கான சுகாதாரச்சான்றிதழ்<br>• மீன்பிடிச் சான்றிதழ் | கடற்தொழில், நீரியல் வளங்கள் திணைக்களம்<br><br>கடற்தொழில்,நீரியல் வளங்கள் திணைக்களம்<br><br>கடற்தொழில்,நீரியல் |

| | | | |
|---|---|---|---|
| | | • பெருங்கண் சூரை மீனுக்கான புள்ளிவிபரவியல் ஆவணம்<br>• மயில் மீனுக்கான ICCATசான்றிதழ்<br>• உற்பத்தி நாட்டுச்சான்றிதழ்<br>• GSP Form A | வளங்கள் திணைக்களம்<br>கடற்தொழில்,நீரியல் வளங்கள் திணைக்களம்<br>கடற்தொழில்,நீரியல் வளங்கள் திணைக்களம்<br>வர்த்தக சேம்பர் கழகம்<br>வணிகத் திணைக்களம் |
| 11 | **அலங்கார மீன்** | தாவர சுகாதாரச்(Phytosanitary)சான்றிதழ் | தேசிய விலங்கு தனிமைப்படுத்தும் சேவை |

## 2.1 பொருட்கள் வாரியான பதிவு

பின்வரும் பொருட்களிற்கான ஏற்றுமதியாளர்கள் சம்பந்தப்பட்ட அதிகார நிறுவனத்தில் வருடாந்தம் பதிவு செய்திருக்க வேண்டும்.

### a) தேயிலை

தேயிலை ஏற்றுமதியாளர்கள் இலங்கை தேயிலைச் சபையில் பதிவு செய்ய கோரப்படுகிறார். இதற்காக பின்வரும் தேவைகள் பூர்த்தியாக்கப்பட வேண்டும்.

- தேவையான ஏற்பாடுகள் (வியாபார பதிவுச்சான்றிதழ் அல்லது கம்பனியின் கூட்டிணைப்புச்சான்றிதழ்)
- தேவையான பொருளாதார வளங்கள் (வேலைக்கான மூலதனம் ஆகக் குறைந்தது ஒரு மில்லியன் - வங்கியிடமிருந்து இதற்கான கடிதம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்)
- தேயிலையை களஞ்சியப்படுத்த போதுமான பண்டகசாலை வசதிகள்.
- முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம். இலங்கை தேயிலைச் சபையின் தேயிலை ஏற்றுமதி பிரிவில் விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளலாம்.

பதிவு கட்டண விபரங்கள் பின்வருமாறு:

- பதிவு கட்டணம் ரூ.: 58,650 –(அனைத்தும் உட்பட)
- தேயிலை பொதியிடுவோருக்கான பதிவு கட்டணம் ரூ.: 58,650 –(அனைத்தும் உட்பட)
- பண்டகசாலை பதிவு கட்டணம் ரூ.: 25,000 – (VAT + NBT)

பதிவு வருடாந்தம் புதுப்பிக்கப்பட வேண்டும். புதுப்பித்தல் கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டும். மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும், இலங்கை தேயிலைச் சபை,இல:574, காலி வீதி, கொழும்பு 03.

இணையம்: http://www.pureceylontea.com/

### b) தெங்கு மற்றும் தெங்கு தயாரிப்புகள்

தெங்கு தயாரிப்பு ஏற்றுமதியாளர்கள் தெங்கு அபிவிருத்தி அதிகார சபையில் (CDA) வருடாந்தம் பதிவு செய்ய வேண்டும். பதிவு கட்டண விபரங்கள் பின்வருமாறு:

- தேங்காய்ப்பருப்பு (கொப்பரா, துருவப்பட்ட தேங்காய், தேங்காய் எண்ணெய், தேங்காய்ப் பால் முதலியவை) : ரூ. 10,000
- தென்னஞ் சிரட்டைத் தயாரிப்புகள் : ரூ. 10,000
- தென்னந்தும்புத் தயாரிப்புகள் (பொருத்தமான VAT & NBT) : ரூ. 10,000

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும், தெங்கு அபிவிருத்தி அதிகார சபை, சந்தைப்படுத்தல் பிரிவு, நாவல வீதி, நாரஹென்பிட்டிய.இணையம்: http://www.cds.lk/web/index.php?lang=en

**c) இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணங்கள்**

இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணங்களிற்கான ஏற்றுமதியாளர்கள் இரத்தினக்கல் விற்பனையாளர்களுக்கான அனுமதிப்பத்திரத்தை தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையிடமிருந்து (NGJA) பெற்றுக்கொள்ள வேண்டும். மாறுபடும் தொகைகளிற்கேற்ப ஏற்றுமதியாளர் எந்த நேரத்திலும் கொண்டிருக்கக்கூடிய அதிகூடிய இருப்பிற்கான இவ் அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு: தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபை(NGJA), No: 25, காலிமுகமுற்றம், கொழும்பு - 3.

இணையம்: http://www.ngja.gov.lk/en/

**d) துணிகள் மற்றும் ஆயத்த ஆடைகள்**

அனைத்து ஆடை ஏற்றுமதியாளர்களும் கைத்தொழில் மற்றும் வணிகம் பற்றிய அமைச்சின் அணிகலன்கள் ஏற்றுமதிசேவைப் பிரிவில் பதிவுசெய்யவேண்டும். முதலீட்டுச் சபை சட்டத்தின் கீழ் பதிவுசெய்த அனைத்து நிறுவனங்களும் முதலீட்டுச் சபையில் பதிவுசெய்து கொள்ளவேண்டும்.

இணையம்: கைத்தொழில் மற்றும் வணிகம் பற்றியஅமைச்சு -http://www.industry.gov.lk/
முதலீட்டுச் சபை -http://www.investsrilanka.com/

## 3. உரிமக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளபொருட்கள்

கீழ் காணப்படும் பொருட்கள் இறக்குமதிமற்றும் ஏற்றுமதியின் கட்டுப்பாட்டாளரின் அனுமதிப்பத்திரத்திற்கு உரியவை:

| பொருட்கள் | பரிந்துரைக்கும் அதிகார நிறுவனம் |
|---|---|
| 1. பவளப்பாறைக் கற்கள், சங்குகள் மற்றும் ஏனையவை | கடற்தொழில்,நீரியல் வளங்கள் திணைக்களம் |
| 2. மரக்குற்றிகள் மற்றும் அரியப்பட்டமரம் | வன பாதுகாப்புத் திணைக்களம் |
| 3. பல்வேறு உற்பத்திக் கழிவுகள் (Metal scraps, slag, dross, ingots, granules Powders etc…) | கைத்தொழில் மற்றும் வணிகம் பற்றியஅமைச்சு |
| 4. யானைத் தந்தம் மற்றும் யானைத தந்ததயாரிப்புகள் | வன சீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் |
| 5. 01-01-1945 ற்கு முன் இலங்கையில் பதிவுசெய்த பயணிகள் மோட்டார் வாகனங்கள் | போக்குவரத்து திணைக்களம் |

ஏற்றுமதிகட்டுப பாட்டுக்கு உட்பட்ட பொருட்களின் ஏற்றுமதிக்கான ஏற்றுமதி கட்டுப்பாட்டு அனுமதிப்பத்திர விதிமுறைகளிற்கான வழிகாட்டுதல்கள்.

http://www.imexport.gov.lk/

## 4. ஏற்றுமதிக்குத் தடைசெய்யப்பட்டஅல்லது கட்டுப்படுத்தப்பட்ட பொருட்கள்

I. இறந்த அல்லது உயிருடனுள்ள பிராணிகள் அல்லது அவற்றின் உடற்பகுதிகள். ஆராய்ச்சி நோக்கங்களிற்கும்,வெளிநாட்டு மிருகக்காட்சிச் சாலைகளிற்கும் மற்றும் நூதனசாலைகளிற்கும் பரிமாற்றம் செய்வதற்கும் அனுமதி வழங்கப்படும்.
II. புராதனபொருட்கள் அல்லது பண்பாட்டுச் சொத்துக்கள்
III. ஆபாயகரமான மருந்துகள்
IV. வெடிப்பொருட்கள்
V. உயிருள்ள மீன்கள் (தடைசெய்யப்பட்ட வகைகள்)
VI. மூல நிலையிலுள்ள கனிமங்கள்
VII. ஆபாசமான வெளியீடுகள் மற்றும் எழுத்துக்கள்

VIII. பிராணிகள் மற்றும் தாவரபாதுகாப்பு ஒழுங்குமுறையின் கீழ் பட்டியலிடப்பட்ட பாதுகாக்கப்பட்ட தாவரங்கள்

## 5. வியாபாரஒப்பந்தங்கள்

விற்பனையாளரிற்கும்(ஏற்றுமதியாளர்),வாங்குபவரிற்கும்(இறக்குமதியாளர்) இடையில் வியாபார ஒப்பந்தமொன்று இருக்கவேண்டும். விற்பனையாளர்(ஏற்றுமதியாளர்) அடிப்படை விலைப்பட்டியலினைத் தயாரித்து வாங்குபவரிற்கு(இறக்குமதியாளர்) அனுப்பவேண்டும். அடிப்படைவிலைப பட்டியலானதுவாங்குபவரின் உறுதியான கொள்வனவிற்கான அழைப்பாகவும் மற்றும் இறக்கு மதியாளர் தனது இறக்குமதிஒழுங்குகளை செய்திருக்க வேண்டும் எனவும் அநேகமாக எதிர்பார்க்கப்படுகிறது. பின்வரும் விபரங்கள் அடிப்படை விலைப்பட்டியலில் கூறப்பட்டிருக்கப்பட வேண்டும்.

- தயாரிப்பின் விபரம்
- அளவு
- விலை
- கட்டண நிபந்தனைகள்(L/C, D/P, D/A முதலியவை.)
- விநியோக நிபந்தனைகள்(FOB, CFR, CIF முதலியவை.)
- பொதியிடல் மற்றும் குறியிடலிற்கானவிபரங்கள்

### 5.1 விநியோக நிபந்தனைகள்

உற்பத்தி விலை மட்டும், செலவு மற்றும் சரக்கு, காப்புறுதி செலவு மற்றும் சரக்கு போன்ற விநியோக நிபந்தனைகள் உலகளாவிய ரீதியில் தரநிர்ணயிக்கப்பட்டவை. அத்துடன் விற்பனையாளரிற்கும் வாங்குபவரிற்கும் போக்குவரத்துச் செலவு, (சரக்குக் கட்டணம்) இடர் காப்பீட்டு பரிமாற்றம் மற்றும் சுங்க அனுமதி தொடர்பாக விற்பனை விலையில் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பது பற்றி தெரிவிக்கின்றது.

**I. உற்பத்தி விலை மட்டும் (....கப்பற்தொகுதிக்கு பெயரிடப்பட்ட துறைமுகம்)**

இதனால் கருதப்படுவது விற்பனையாளர் பொருட்களை இறக்குமதியாளரால் பரிந்துரைக்கப்பட்ட கப்பலில் ஏற்ற வேண்டும்,செலவு மற்றும் இடர் கப்பல் ரயிலின் பிரிக்கப்படும். அதாவது இறக்குமதியாளர் பொருட்களிற்கு அனைத்து செலவுகள் மற்றும் இழப்பால் அல்லது சேதத்தால் ஏற்படும் இடர்களிற்கும் இந்தக் கட்டத்திலிருந்து தொடக்கம் பொறுப்பேற்க வேண்டும். இந்த நிபந்தனையின் கீழ் ஏற்றுமதியாளர் ஏற்றுமதிக்காகப் பொருட்களை கட்டாயம் எடுத்துக்கொள்ள வேண்டும். இந்த நிபந்தனை கடல் போக்குவரத்திற்குப் பயன்படுத்தப்படும்.

**II. செலவு மற்றும் சரக்கு – ((CNF/CFR) (....பெயரிடப்பட்ட சேரும் துறை)**

செலவு மற்றும் சரக்குக் கட்டணம் என்பது விற்பனையாளர் பொருட்களை கொண்டு வருவதற்கு சேரும் துறைக்குச் செலுத்தும் செலவு மற்றும் சரக்குக் கட்டணம் ஆகும். ஏற்றுமதியாளர் ஏற்றுமதிக்கான பொருட்களை கட்டாயம் அகற்ற வேண்டும். எவ்வாறாயினும், இடரானது பொருட்கள் கப்பல் ரயிலினை கடந்த பின்னர் இறக்குமதியாளரிற்கு மாற்றப்படுகிறது. இந்த நிபந்தனை கடல் போக்குவரத்திற்காக மட்டும் பயன்படுத்தப்படும்.

**III. காப்புறுதி செலவு மற்றும் சரக்கு- (CIF) (....பெயரிடப்பட்ட சேரும்துறை)**

இந்த நிபந்தனையின் கீழ், விற்பனையாளர் பெயரிடப்பட்ட இலக்கு துறைக்குப் பொருட்களைக் கொண்டு வருவதற்கு கட்டாயம் செலவு மற்றும் சரக்குக் கட்டணங்களைச் செலுத்த வேண்டும் கூடுதலாக, விற்பனையாளர் இறக்குமதியாளரின் பொருட்களிற்கு கொண்டு செல்லும் போதான இழப்பால் அல்லது சேதத்தால் ஏற்படும் இடர்களிற்கு எதிரான கப்பல் காப்புறுதியினைக் கட்டாயம் பெற்றிருக்க வேண்டும். இந்த நிபந்தனை கடல் போக்குவரத்திற்காக மட்டும் பயன்படுத்தப்படும்.

## 6. கட்டண நிபந்தனைகள்

ஏற்றுமதியாளரிற்கும் இறக்குமதியாளரிற்கும் இடையில் ஒப்புக்கொள்ளப்பட்ட கட்டண நிபந்தனைகள், பரிமாற்றத்தில் சம்பந்தப்பட்ட இடர், மற்றும் வியாபாரத்தின் அளவு அடிப்படையில் கட்டண நிபந்தனைகள் பற்றி ஏற்றுமதியாளரும் இறக்குமதியாளரும் எந்த அளவிற்கு அறிந்து கொண்டுள்ளார்கள் என்பதில் தங்கியுள்ளது. வெளிநாட்டு வர்த்தகத்திற்கான கட்டண முறைகளாவன:

a) முற் கூட்டிய கொடுப்பனவு
b) கடன் கடிதங்கள்(LC)
c) ஆவண சேகரிப்பு
   i. கட்டணத்திற்கான ஆவணங்கள்(DP)
   ii. ஒப்புதலிற்கான ஆவணங்கள்(DA)
d) திறந்த கணக்கு
e) சரக்குக் கணக்கு

### a) முற்பணம்

ஏற்றுமதிக்காக மிகவும் விரும்பப்படும் கட்டண முறை முற் கூட்டிய கொடுப்பனவாகும். இந்தக் கட்டண முறையில் வாங்குபவர் விற்பவரிற்கு(ஏற்றுமதியாளர்) பொதுவாக கொள்வனவுடன் பொருட்கள் அனுப்பப்பட முன்னரே பணத்தை வைப்புச்செய்வார்.

### b) கடன் கடிதங்கள்(LC)

கடன் கடிதமானது வாங்குபவரின் கோரிக்கைக்கிணங்கவும் மற்றும் வாங்குபவரின் நிபந்தனைகளின்படியும் வங்கியினால்(வழங்கும் வங்கி) விற்பவரிற்கு(பயனாளி) வழங்கப்படும் எழுத்துறுதி. (குறிக்கப்பட்ட ஆவணங்களுக்கேற்பஇ எல்லாக் கடன் நிபந்தனைகள் விதிகளுக்கும் இவைவாக கடன் விண்ணப்பதாரர் கூறப்பட்ட தொகையினைப் பரிந்துரைக்கப்பட்ட கால எல்லையினுள் செலுத்துவதற்கானது)

- இது வாங்குபவர் மற்றும் விற்பவர் இருவராலும் மிகவும் ஏறறுக்கொள்ளக்கூடியது.

### c) ஆவண சேகரிப்பு

விற்பனையாளர் தனது நாட்டிலுள்ள வங்கியின் (பணம் செலுத்தும் வங்கி - Remitting Bank) சேவையை பயன்படுத்துவார். பணம் செலுத்தும் வங்கி வாங்குவோரின் நாட்டிலுள்ள வங்கியின் சேவையை வாங்குவோரிடமிருந்து பணத்தை சேகரிப்பதற்கு (சேகரிக்கும் வங்கி –Collecting Bank) பயன்படுத்தும். வாங்குவோரின் வங்கியுடன் அனைத்தும் சுமுகமாக நடைபெறுமாயின், வாங்குவோரின் வங்கி பணத்தை சேகரித்து அதனை விற்பனையாளரின் வங்கிக்கு வைப்பிலிடும்.

- ஆவண சேகரிப்பானது இரண்டாக பிரிக்கப்படலாம்.

**i. கட்டணத்திற்கெதிரான ஆவணங்கள்(DP நிபந்தனைகள்)……**

கப்பலில் ஏற்றிய பின்னர், ஆவணங்கள் விற்பனையாளரின் வங்கியின் (Remitting Bank) மூலம் தெளிவான அறிவுரைகளுடன் வாங்குவோரின் வங்கிக்கு வழங்கப்படும். பணம் செலுத்தும் வங்கியின் அறிவுரைக்கமைய,வாங்குவோரின் வங்கி (Collecting Bank) அனைத்து கப்பற்தொகுதி ஆவணங்களையும் வாங்குவோர் கட்டணம் செலுத்திய பின்னரே அவரிற்கு வழங்கும். பின்னர் விற்பனையாளரின் வங்கிக்கு வைப்பிலிடும் அத்துடன் விற்பனையாளரின் வங்கி அதனை விற்பனையாளரிற்கு (ஏற்றுமதியாளர்) வழங்கும்.

### ii. ஒப்புதலிற்கெதிரான ஆவணங்கள்(DAநிபந்தனைகள்) நிபந்தனை பற்றுச்சீட்டு

பரிமாற்றத்திற்கான பற்றுச்சீட்டுடன் (Term Bill) அனைத்து கப்பற்தொகுதி ஆவணங்களும் வாங்குவோரின் வங்கிக்கு தெளிவான அறிவுறுத்தல்களுடன் விற்பனையாளரின் வங்கிக்கூடாக வழங்கப்படும். விற்பனையாளரின் வங்கியின் அறிவுரைக்கமைய, வாங்குவோரின் வங்கி நிபந்தனை பற்றுச்சீட்டின் ஏற்றுக்கொள்ளலின் பின்னர்,பின்னரும் மற்றும் ஏற்றுக்கொள்ளும் திகதிக்குள் கட்டணம் பெற்றுக்கொள்ளப்பட்டதும் வாங்குவோரின் வங்கி ஆவணங்களை அவரிற்கு வழங்கும்.

### d) திறந்த கணக்கு

வாங்குவோரின் கடனை செலுத்தும் பொருட்டுமுன்னர் தீர்மானிக்கப்பட்ட, எதிர்கால திகதி ஒன்றில் செலுத்துவதற்காக விற்பனையாளரிற்கும் வாங்குவோரிற்கும் இடையிலான ஏற்பாடாகும். அதாவது ஒவ்வொரு மாதத்தின் இறுதியிலும் அல்லது ஒவ்வொரு கப்பற்தொகுதியின் ஒரு மாதத்தின் பின்னரும். இம்முறையின் கீழ் பொருட்கள் மற்றும் ஆவணங்கள் இரண்டும் நேரடியாக வாங்குவோரிற்கு முன்னரே அனுப்பப்படும்.

### e) சரக்குக் கணக்கு

இது திறந்த கணக்கைப்போன்றது. பொருட்கள் மற்றும் ஆவணங்கள் இரண்டும் நேரடியாக வாங்குவோரிற்கு முன்னரே அனுப்பப்படும். வாங்குவோர் ஒப்புக்கொள்ளப்பட்ட விற்பனைக்கணக்கு தவணைகளில் அல்லது ஒவ்வொரு விற்பனை முடிவின் போதும் பணத்தை விற்பனையாளரிற்கு வைப்புச்செய்வார்.

## 7. வர்த்தக மாதிரிகளை அனுப்புதல்

வெளிநாட்டு வாங்குனர் வர்த்தக பரிமாற்றம் இடம்பெற முன்னர் தயாரிப்புகளின் மாதிரிகளை கேட்கலாம். அத்தகைய ஒரு நிலையில் ஏற்றுமதியாளர் தனது தயாரிப்புகளின் மாதிரிகளை வெளிநாட்டு வாங்குனரிற்கு அனுப்புவார் அத்துடன் மாதிரிகள் தேவையற்ற தாமதங்களை தவிர்ப்பதற்காக விமானத்தின் மூலம் வழமையில் அனுப்பப்படும்.

ரூ. 50,000/= பெறுமதிவரையிலான வர்த்தக மாதிரிகள் இலவசமாக ஏற்றுமதி செய்யலாம் அத்துடன் சுங்க பிரகடன விண்ணப்பப் படிவம்(CUSDEC 1/11) மட்டும் அளிக்கப்பட வேண்டும். சுங்கத்தின் பொது இயக்குனரால் தெரிவிக்கப்படுகின்ற வர்த்தக மாதிரிகளின் அலகுகளின் எண்ணிக்கையே ஏற்றுமதி செய்யமுடியும். எவ்வாறாயினும், இரத்தினகற்கள் மற்றும் ஆபரணங்களின் மாதிரிகள் மாதிரிகளாக அனுப்ப அனுமதிக்கப்பட வில்லை.

## 8. பொதியிடல்

பொருள் சந்தையில் நிலை பெறுவதற்கு பொதியிடல் முக்கியமான ஒரு அம்சமாகும். ஏற்றுமதியாளரிட மிருந்து இறுதி நுகர்வோரை சென்றடையும் வரை பொதியிடலானது பொருளைபாதுகாக்க வேண்டும்.

ஏற்றுமதியாளர் பின்வருவனவற்றைஉறுதிப்படுத்தவேண்டும்:

1. பொதிகள் கடல் அல்லது வான்போக்குவரத்தின் போதானகடினமான கையாளுதலின் போது அதைஎதிர்க்கும் வகையில் முறையாகபொதியிடப்பட்டிருக்கிறது.
2. வர்த்தகஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ளவாறு வாங்குவோரின் தேவைகளிற்கேற்ப பொதியிடல் செய்யப்பட்டுள்ளது.
3. கப்பற்குறிமற்றும் துறைமுகம் என்பன அனைத்துப் பொதிகளிலும் குறிக்கப்பட்டிருக்க வேண்டும்.
4. சுங்கஅதிகாரிகளால் பொதிகள் ஆய்வுக்குட்படுத்தும் போதுஆய்வை எளிதாக்கும் வகையில் ஏற்றப்பட்டிருக்கவேண்டும்.

ஏற்றுமதிபொதியிடலில் கருத்தில் கொள்ளப்பட வேண்டிய ஏனைய முக்கியகாரணிகள்:

- ஏற்றுமதி சந்தையிலுள்ள விதிகள் - உங்களுடைய சரக்குகள் சந்தை விதிகளுடன் இணங்குகின்றனவா எனசரிபார்த்தல் சிலநாடுகளில் சிலகுறியீடுகள் தேவைப்படலாம். அத்துடன் வேறு சிலநாடுகளில பொதியிடப் பயன்படும் சிலபொருட்கள் அனுமதிக்கப் படுவதில்லை.
- பலகையால்பொதியிடலில் உள்ளகட்டுப்பாடுகள் - சர்வதேச வர்த்தகத்தில் பயன்படுத்தப்படும் பலகைப பொதியிடலானது தேவையற்ற பூச்சிகளின் பரவலிற்கு எதிராகப் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற சர்வதேச தாவர பாதுகாப்பு மாநாட்டின் (International Plant Protection Convention) ஆணை உள்ளது. வெப்ப சிகிச்சை அல்லது மெதெயில் புரோமைட்டுடனான நச்சுவாயு என்பன சிகிச்சை முறைகளாக இருக்கலாம். சர்வதேச தாவர பாதுகாப்பு மாநாடு செயலாளர் ISPM 15 (தாவர சுகாதார அளவீடுகளுக்கான சர்வதேச தரங்கள்)என்பதை வழங்கியுள்ளார் "சர்வதேச வர்த்தகத்தில் மர பொதியிடல் பொருட்களை சீர்படுத்துவதற்கான வழிகாட்டுதல்கள்". புலசந்தர்ப்பங்களில் உங்களுடையமரப்பொதியிடலின் ISPM 15 உடன் இணங்குகின்றதா எனசரிபார்த்தல் போதுமானது.
- பொதியிடல் கழிவுகள் - பொதியிடலிற்கான தேவையானதுஇ ஒரு பொருளின் தயாரிப்பின் ஆய்வு, வடிவமைப்பு மற்றும் சந்தைப்படுத்தல் நிலைகளில் மதிப்பீடுசெய்யப்பட வேண்டும்.இலக்கு எப்போதும் தேவையற்ற பொதியிடலைக் குறைப்பதாக இருக்க வேண்டும். பொதியிடலிற்கான தேவைஎங்குள்ளதோ,அங்குகுறைத்தல்,மீள்பயன்பாடு மற்றும் மீள்சுழற்சி போன்ற பொதியிடலிற்கான அமைப்பைபின்பற்ற வேண்டும். பல ஏற்றுமதிச் சந்தைகளில், பொதியிடல் கழிவுகள் மற்றும் சேகரிப்பு போன்றவற்றில் கடுமையான விதிகள் உள்ளன,அவை ஜேர்மனியிலுள்ள"green dot system"ஐ போன்றவை.
- இடர் விளைவிக்கக்கூடிய பொருட்கள் - எந்தவொரு அபாயகரமான பொருட்களின் ஏற்றுமதிக்கும் பாதுகாப்பாக பொதியிடப்பட்டு தெளிவாகக் குறியிடப்பட்டு அத்துடன் பெயரிடப்பட்டிருத்தல் வேண்டும். நீங்கள் பயன்படுத்தும் போக்குவரத்திற்கேற்ப விதிகள் சற்று மாறுபடும்.
- காப்புறுதி – உங்கள் பொருட்கள் பொதியிடல் குறைபாட்டால் பாதிக்கப்பட்டன என காட்டப்பட்டால் உங்களது போக்குவரத்து காப்புறுதி பாதகமான பாதிப்பிற்கு உட்படலாம்.
- ஒப்பந்தங்கள் - சர்ச்சையை தவிர்ப்பதற்கு பொருட்கள் போக்குவரத்தின் போது சேதமடைந்திருக்கும் பட்சத்தில். வாங்குவோருடனான ஒப்பந்தத்திலுள்ள பொதியிடல் குறிப்புகளையும் கவனத்திற் கொள்ளுதல்.

## 9. சரக்கிற்கான இட ஒதுக்கீடு

### a) கடல் சரக்கு

கப்பலில் ஏற்றும் திகதிக்கு முன்னராகவே கப்பலிற்கான இடம் ஒதுக்கப்பட்டிருக்க வேண்டும். எனவே,ஏற்றுமதியாளர் கப்பலிற்கான இடங்களை இட ஒதுக்கீடுசெய்து பெற்றுக்கொள்ளக் கப்பல் முகவரை சந்திக்க வேண்டும். இந்த நோக்கத்திற்காக,ஏற்றுமதியாளர் சரியானமுறையில் பூர்த்திசெய்யப்பட்ட கப்பற்குறிப்பினை(EXP. 3a forms – 03 copies) கப்பல் முகவரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

மேலதிகவிபரங்களுக்கு: http://www.slpa.lk/EDI_services.asp?chk=3#

### b) வான் சரக்கு

ஏற்றுமதியாளர் வான் சரக்கிற்காக சம்பந்தப்பட்ட நாட்டின் சேவையை வழங்கும் விமான முகவர்களின் அலுவலகங்களுடன் சரி பார்த்திருக்க வேண்டும். அனுப்புவதற்கான கப்பல் வழிமுறைகளிற்கான ஆவணத்தை ஏற்றுமதியாளர் சமர்ப்பிக்க வேண்டும். இறுதியாக இவ் ஆவணம் விமான வழி ரசீது (Airway Bill)வழங்க பயன்படுத்தப்படும்.

விமானத்தின் வருகை நேரத்திற்கு முன்னதாகவே விமான நிலையத்திற்கு சரக்குகள் கொண்டு வரப்பட வேண்டும். இந்நேரம் "Cut off time" என அழைக்கப்படும்.

| | பொருள் | Cut off time |
|---|---|---|
| 01 | பொதுவான சரக்கு | 12 மணித்தியாலங்கள் - STD |
| 02 | வெற்றிலை/GOH/VAL சரக்கு | 06 மணித்தியாலங்கள் - STD |
| 03 | வெற்றிலை தவிர்ந்த அழிவடைந்துவிடக்கூடிய சரக்கு | 05 மணித்தியாலங்கள் - STD |
| 04 | 50கிலோ வரையிலான பெருங்கண் சூரைமீன்/ சமையல் மீன் கப்பற்தொகுதி | 05 மணித்தியாலங்கள் - STD |
| 05 | உயிர் மீன் | 04 மணித்தியாலங்கள் - STD |
| 06 | கூரியர் பொருட்கள்/பத்திரிகைகள் | 03 மணித்தியாலங்கள் - STD |
| 07 | உயிருள்ள மிருகங்கள்/இராஜதந்திர அஞ்சல்/மனித உடல் மற்றும் நேரடி மனித உறுப்புகள் | 02மணித்தியாலங்கள் - STD |

STD –புறப்படுவதற்கான நியம நேரம்

## 10. ஏற்றுமதிக்குத் தேவையான சான்றிதழ்கள்

**a) உற்பத்தி நாட்டுச்சான்றிதழ்(GSP சான்றிதழ்)**

இறக்குமதி செய்யும் நாட்டின் சுங்கம் இச் சான்றிதழைக்கோரும். இது வணிகத் திணைக்களத்தால் வழங்கப்படும். அனைத்து GSP திட்டங்கள், இலவச வர்த்தக ஒப்பந்தங்கள் மற்றும் பல்வகை வர்த்தக ஒப்பந்தங்களின் கீழ் உற்பத்தி நாட்டுச்சான்றிதழை வழங்குவதற்கு வணிகத் திணைக்களம் பொறுப்பாகும்.

**b) உற்பத்தி நாட்டுச்சான்றிதழ்**

இறக்குமதி செய்யும் நாட்டின் சுங்கம் இச் சான்றிதழையும் கோரும். இது வர்த்தக சம்மேளனத்தால் வழங்கப்படும்.

உ+ம்: இலங்கை வர்த்தக சம்மேளனம் அல்லது தேசிய வர்த்தக சம்மேளனம்

**c) தரச்சான்றிதழ்**

இலங்கைகட்டளைகள் நிறுவனத்தினால்(SLSI) இது வழங்கப்படும். தனியார் தரச் சான்றிதழ்கள் SGS Lanka (Pvt) Ltdநிறுவனத்தால் வழங்கப்படும்.

**d) சுகாதாரச்சான்றிதழ்**

இறைச்சி, மீன் மற்றும் உயிருள்ள பிராணி என்பன ஏற்றுமதி செய்யப்படும் போது இறக்குமதி செய்யும் நாட்டின் சுகாதார அதிகார சபைகளினால் சுகாதாரச்சான்றிதழ் கோரப்படலாம். இது பிராணி உற்பத்தி மற்றும் சுகாதாரத் துறையினால் வழங்கப்படும். உணவுப் பொருட்கள் தொடர்பாக, சுகாதார அமைச்சின் உணவு கட்டுப்பாட்டுப் பிரிவினால் சுகாதாரச் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

**e) தாவர சுகாதாரச்(Phytosanitary)சான்றிதழ்**

வெட்டு மலர்கள், பசுமையான தாவரங்கள், பழங்கள் மற்றும் ஏனையவை ஏற்றுமதி செய்யும் போது இறக்குமதி செய்யும் நாட்டினால் இச் சான்றிதழ் கோரப்படும். இது விவசாய திணைக்களத்தின் தாவர தனிமைப்படுத்தும் சேவையினால் வழங்கப்படும்.

**f) புகையூட்டல் பரிசோதனை சான்றிதழ்**

வெட்டு மலர்கள், பசுமையான தாவரங்கள், எள் விதைகள், முந்திரிப் பருப்பு, தேயிலை போன்ற விவசாய தயாரிப்புகளின் ஏற்றுமதிக்காக வாங்குவோர்/ அரசாங்கத்தால் இது கோரப்படும். புகையூட்டும் செயற்பாடுகள் விவசாய திணைக்களத்தின் தாவர தனிமைப்படுத்தும் சேவையினால் செய்யப்படும். சில தனியார் நிறுவனங்கள் இச் செயற்பாடுகளை செய்வதற்கு திணைக்களத்தால் அங்கீகாரமளிக்கப்பட்டுள்ளன.

## 11. சுங்க நடைமுறைகள்

### a) சுங்க அறிவிப்பு செய்தல்

**1. சுங்கப் பிரகடனம்(CUSDEC)**

சர்வதேச வர்த்தகத்தின்போது பொருட்கள் நாடுகளின் எல்லைகளை கடக்கின்றன. எல்லையில்,வர்த்தக பரிவர்த்தனையில் ஈடுபடும் பங்காளர்கள் இறக்குமதி அல்லது ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களின் விபரங்கள் தொடர்புடைய அதிகார சபையில் பிரகடனம் செய்யக் கோரப்படுகின்றன. பிரகடனங்கள் மேற்கொள்ளப்பட்ட எல்லைப்புள்ளியில் கடல் துறைமுகம்/ விமான நிலையம்/ நில. புள்ளி நற்பிரகடனம் என பெயரிடப்பட்ட எதுவாகவும் இருக்கலாம். இலங்கையில், பொருட் பிரகடனம் CUSDEC மற்றும் சுங்க கட்டளை என அழைக்கப்படுகிறது,பிரிவு 47 இறக்குமதிக்காகவும் அத்துடன் பிரிவு 57 ஏற்றுமதிக்காகவும், இறக்குமதி/ஏற்றுமதியினை விளைவிப்பதற்காக சுங்கத்திற்கு பிரகடனம் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும் என ஒவ்வொரு இறக்குமதி/ஏற்றுமதியும் வரையறுக்கின்றது. CUSDECல் பிரகடனப்படுத்தப்பட்ட விபரங்கள் முக்கியமானவை, ஏனெனில் விபரங்கள் இட உட்குறிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் விளைவுகளை உள்ளடக்கியிருக்கும். எனவே,CUSDEC மிகவும் அவதானத்துடன் நிரப்பப்பட வேண்டும்.

மேலதிக CUSDEC வழிகாட்டுதல்களுக்காக: http://www.customs.gov.lk/cusdec.html

**2. வணிக விலைப்பட்டியல்**

விலைப்பட்டியலானது கப்பற்தொகுதி சம்பந்தமான அனைத்து விபரங்களையும் கூறி ஏற்றுமதியாளரால் தயாரிக்கப்படும் ஒரு ஆவணமாகும். இது ஏற்றுமதி அலுவலகத்தில் செயற்பாட்டின் போதான பொருட் பிரகடனத்துடன் நிரப்பப்பட வேண்டும். இறக்குமதி செய்யும் நாட்டினால் விற்பவரால் கூறப்படும் விலை (உ+ம் விற்பனை விலை) மற்றும் குறிப்பிடப்படும் சரக்கு, காப்புறுதி மற்றும் பொதியிடல், ஏனையவை, வழங்குவதற்கான நிபந்தனைகள் மற்றும் கட்டணத்திற்கான செலவுகள் உள்ள ஆவணம் கோரப்படும். இது பொருட்கள் அனுப்பப்படும் நாட்டின் சுங்கப் பெறுமதியை தீர்மானிப்பதற்கான நோக்கிற்காகும்.

**3. பொதியிடும் பட்டியல்**

ஒவ்வொரு தனிப் பொதியினதும் உள்ளடக்கங்களைக் குறிப்பிடும் ஆவணமாகும்.

**4. ஏனைய ஆவணங்கள்(பொருத்தமாயின்)**

- ஏதாவது அனுமதிகள்/ அனுமதிப்பத்திரம்
- தேயிலைக் கலவை தாள்கள்
- பொருள் பயன்பாட்டுத் தாள்கள்

5. **நேரடி வர்த்தக உள்ளீடு (DTI)**

- நேரடி வர்த்தக உள்ளீடு ஏற்றுமதியாளர் அல்லது அவரது முகவரிற்கு (விளம்புகையாளர்) சுங்க செயல்முறைகள் அல்லது படிமுறைகளைத் தொலைவிலிருந்து (விளம்புகையாளரின் அலுவலகத்திலிருந்தவாறே) செய்வதற்கான திறனைக் கொடுக்கிறது.
- கீழுள்ள தொடர்பை நேரடி வர்த்தக உள்ளீடு பதிவிற்காக அணுகவும்: http://www.customs.gov.lk/dtiregi.html

**b) ஏற்றுமதிக் கட்டணம் மற்றும் வரிக்கட்டணம்**

தற்போது, ஏற்றுமதியாளர்கள் சுங்கக் கட்டணம் செலுத்தக் கோரப்படுவதில்லை. இருந்த போதிலும்,பாரம்பரிய தயாரிப்புகளை (தேயிலை, இறப்பர், தெங்கு போன்றவை) ஏற்றுமதி செய்யும் போது சுங்கத்திற்கு ஏற்றுமதி வரி கட்டாயம் செலுத்தப்பட வேண்டும்.

**அட்டவணை**

| H.S.Hdg (I) | H.S.Code (II) | | விபரங்கள் (III) | வரி வீதம் (IV) |
|---|---|---|---|---|
| 05.08 | 0508.00 | | பவளம் மற்றும் ஒத்த பொருட்கள், வேலை செய்யப்படாத / சாதாரணமாக தயாரிக்கப்பட்ட வேறு வேலை செய்யப்படாதவை; மெல்லுடலிகளின் ஓடுகள், ஓட்டு மீன்கள்/ அத்துடன் கணவாய் ஓடு,வேலை செய்யப்படாத / சாதாரணமாக தயாரிக்கப்பட்டஆனால் வடிவமாக வெட்டப்படாத, தூள் மற்றும் கழிவு | |
| | 0508.00.10 | --- | சங்குகள் | 1,000 அலகுகளிற்குரூ. 100/= |
| 08.01 | | | தேங்காய்கள், பிரேஸில் கச்சான் மற்றும் முந்திரிப் பருப்பு, உடனடி/ உலர்த்தியவை,கோது உடைக்கப்பட்ட அல்லது தோல் உரிக்கப்பட்டவை | |
| | | - | தேங்காய்கள்: | |
| | 0801.12 | -- | உள் ஓட்டிலுள்ள | ஒரு அலகுகிற்கு ரூ. 7/= |
| 09.02 | | | தேயிலை, சுவையூட்டப்பட்டாலும் படாவிட்டாலும் | |
| | 0902.40 | - | ஏனைய கருந் தேயிலை(புளித்த) அத்துடன் ஏனைய பகுதியாக புளித்த தேயிலை | |
| | | --- | ஏனையவை: | |
| | 0902.40.91 | ---- | முற்றிலும் இலங்கைக்குரியது என இலங்கை தேயிலைச் சபையால் சான்றுபடுத்தப்பட்ட சுவை | ஒரு கிலோவிற்கு ரூ. 10/= அல்லது கொழும்பு தேயிலை ஏலத்தின் சராசரி விலையில் 2.5%எது கூடியதோ அது |
| | 0902.40.92 | ---- | முற்றிலும் இலங்கைக்குரியது என இலங்கை தேயிலைச் சபையால் சான்றுபடுத்தப்பட்ட, ஏனைய | ஒரு கிலோவிற்கு ரூ. 10/= அல்லது கொழும்பு தேயிலை ஏலத்தின் சராசரி விலையில் 2.5%எது கூடியதோ அது |
| | 0902.40.93 | ---- | ஏனைய, சுவை | ஒரு கிலோவிற்கு ரூ. 10/= அல்லது கொழும்பு தேயிலை ஏலத்தின் சராசரி விலையில் 2.5%எது கூடியதோ அது |
| | 0902.40.99 | ---- | ஏனைய | ஒரு கிலோவிற்கு ரூ. 10/= அல்லது கொழும்பு தேயிலை ஏலத்தின் சராசரி விலையில் 2.5%எது கூடியதோ அது |

| | | | | |
|---|---|---|---|---|
| 25.07 | 2507.00 | | கயோலின் மற்றும் ஏனைய கயோலின் களி, சூளையிடப்பட்டதா இல்லையா | ஒரு மெற்ரிக் தொன்னிற்கு ரூ. 1,100/= |
| 25.10 | | | இயற்கை கல்சிய பொசுப்பேற்றுக்கள், இயற்கை அலுமினிய கல்சிய பொசுப்பேற்றுக்கள் மற்றும் பொசுப்பேற்றுச் சுண்ணாம்பு | |
| | 2510.10 | - | அரைக்கப்படாத | |
| | 25.10.10 | --- | பொசுப்பேற்றுப் பாறை | ஒரு மெற்ரிக் தொன்னிற்கு ரூ. 4,400/= |
| 25.13 | | | படிகக்கல்; உப்பு; இயற்கை குருந்தம், இயற்கை பிணைச்சல் மற்றும் ஏனைய இயற்கை உராய்வுகள், வெப்பமேற்றப்பட்டதா இல்லையா | |
| | 2513.20 | - | உப்பு, இயற்கை குருந்தம்,இயற்கை பிணைச்சல் மற்றும் ஏனைய இயற்கை உராய்வுகள் | ஒரு மெற்ரிக் தொன்னிற்கு ரூ. 24,200/= |
| 25.16 | | | கிரனைட், பாறை கலந்த வகை, மணற்கல் மற்றம் ஏனைய நினைவுச்சின்ன அல்லது கட்டிடக் கல், தோராயமாக மெருகேற்றப்பட்டதா இல்லையா அல்லது வெறுமனே வெட்டப்பட்ட, அறுப்பதன் மூலம் அல்லது இல்லையெனில், செவ்வக வடிவ (சதுரம் உட்பட) தொகுதிகளாக அல்லது அடுக்குகளாக. | |
| | | - | கிரனைட் | |
| | 2516.11 | -- | மூல நிலை அல்லது தோராயமாக மெருகேற்றப்பட்ட - கிரனைட் | ஒரு கன மீற்றரிற்கு ரூ. 24,000/= |
| | 2516.12 | -- | வெறுமனே வெட்டப்பட்ட, அறுப்பதன் மூலம் அல்லது இல்லையெனில், செவ்வக வடிவ (சதுரம் உட்பட) தொகுதிகளாக அல்லது அடுக்குகளாக. | ஒரு கன மீற்றரிற்கு ரூ. 12,000/= |
| | 2516.20 | - | மணற்கல் | ஒரு கன மீற்றரிற்கு ரூ. 12,000/= |
| | 2516.90 | - | ஏனைய நினைவுச்சின்ன அல்லது கட்டிடக் கல் | ஒரு கன மீற்றரிற்கு ரூ. 12,000/= |
| 25.17 | | | கூழாங்கற்கள், சரளைக்கற்கள், கொங்கிறீற்றுக்கு அல்லது தெருவுக்குக் கல் பரவ அல்லது புகையிரதப் பாதைகளுக்கு ஏற்ற வகையான துணிக்கை மணல், வெப்பத்தில் பதனிடப்பட்ட அல்லது படாத விளை கற்கள்இ தார்க் கழிவுகள் போன்ற பிற கசடுகள் - மேலே தலையங்கத்தில் குறிப்பிட்ட பொருட்களை உள்ளடக்கியோ அன்றியோ; தார்ப் பரவல், துணிக்கைகள், செதுக்குத் துகள்கள்,அல்லது தலையங்கம் 25.15 அல்லது 25.16ல் உள்ள கற்களின் மாசுகள், தூசுகள் - வெப்பப் பதனிடல் செய்யப்பட்டோ அன்றியோ | |
| | | - | துகள்கள், துகள் மற்றும் பொடி, கற்களின் தலைப்பு 25.15 அல்லது 25.16, வெப்பமேற்றப்பட்டதா இல்லையா. | |
| | 2517.49 | -- | கற்கள் - ஏனைய | ஒரு மெற்ரிக் தொன்னிற்கு ரூ. 3,300/= |
| 25.25 | | | மைக்கா, சேர்த்த, பிரித்த; மைக்கா கழிவு | |
| | 2525.10 | - | மூல நிலை மைக்கா மற்றும் தாள்களாக்கப்பட்ட மைக்கா அல்லது பிரித்த | ஒரு மெற்ரிக் தொன்னிற்கு ரூ. 1,100/= |
| | 2525.30 | - | மைக்கா கழிவு | ஒரு மெற்ரிக் தொன்னிற்கு ரூ. 110/= |
| 25.26 | | | இயற்கை சலவைக் கல், தோராயமாக மெருகேற்றப்பட்டதா இல்லையா அல்லது வெறுமனே வெட்டப்பட்ட, அறுப்பதன் மூலம் அல்லது இல்லையெனில், செவ்வக வடிவ (சதுரம் உட்பட) தொகுதிகளாக அல்லது அடுக்குகளாக; பட்டுக்கல். | |
| | 2516.10 | - | நொறுக்கப்படாத, தூளாக்கப்படாத | ஒரு மெற்ரிக் தொன்னிற்கு ரூ. 3,300/= |

| | | | | |
|---|---|---|---|---|
| | 2516.20 | - | நொறுக்கப்பட்ட, தூளாக்கப்பட்ட | ஒரு மெற்றிக் தொன்னிற்கு ரூ. 2,200/= |
| 25.30 | | | வேறு எங்கும் குறிப்பிடப்படாத அல்லது உள்ளடக்கப்படாத கனிம பிரதியீடுகள் | |
| | 2530.10 | - | வெர்மிகியுலைற், பேர்லைற் மற்றும், விரிவாக்கப்படாத | ஒரு மெற்றிக் தொன்னிற்கு ரூ. 1,100/= |
| | 2530.20 | - | கீசரைற், எப்சோமைற் (இயற்கை மக்னீசிய சல்பைட்டுக்கள்) | ஒரு மெற்றிக் தொன்னிற்கு ரூ. 1,100/= |
| | 2530.90 | - | ஏனைய: | |
| | 2530.90.10 | --- | இயற்கை ஆர்சனிக் சல்பைட்டுக்கள் | ஒரு மெற்றிக் தொன்னிற்கு ரூ. 1,100/= |
| | 2530.90.20 | --- | உடைந்த கொன்கிறீற் | ஒரு மெற்றிக் தொன்னிற்கு ரூ. 1,100/= |
| | 2530.90.90 | --- | ஏனைய | ஒரு மெற்றிக் தொன்னிற்கு ரூ. 1,100/= |
| 26.14 | 2614.00 | | ரைற்ரானியம் தாதுக்கள் மற்றும் செறிவூட்டப்பட்டவை | |
| | 2614.00.10 | --- | இல்மனைற் | ஒரு மெற்றிக் தொன்னிற்கு ரூ. 1,650/= |
| | 2614.00.20 | --- | றுரைல் | ஒரு மெற்றிக் தொன்னிற்கு ரூ. 2,200/= |
| | 2614.00.90 | --- | ஏனைய | ஒரு மெற்றிக் தொன்னிற்கு ரூ. 1,100/= |
| 40.01 | | | இயற்கை றப்பர், பலற்ரா, கு(g)ற்ரா-பெர்ச்சா, கு(g)வேயுல்,சிக்கில் மற்றும் ஒத்த இயற்கை பசைகள், அடிப்படை நிலைகளில் அல்லது தட்டுக்களாக, தாள்களாக அல்லது .............உள்ள | |
| | 4001.10 | - | இயற்கை றப்பர் மரப்பால்,முன்னர் வல்கனைசுப்படுத்தப்பட்டதா இல்லையா: | |
| | 4001.10.10 | --- | பிரிக்கப்பட்ட றப்பர் | ஒரு கிலோவிற்கு ரூ.4/= |
| | 4001.10.90 | --- | ஏனைய | ஒரு கிலோவிற்கு ரூ.4/= |
| | | - | ஏனைய நிலைகளிலுள்ள இயற்கை றப்பர்: | |
| | 4001.21 | -- | புகையூட்டிய தாள்கள்: | |
| | 4001.21.10 | --- | R.S.S.1 | ஒரு கிலோவிற்கு ரூ.4/= |
| | 4001.21.20 | --- | R.S.S.2 | ஒரு கிலோவிற்கு ரூ.4/= |
| | 4001.21.30 | --- | R.S.S.3 | ஒரு கிலோவிற்கு ரூ.4/= |
| | 4001.21.40 | --- | R.S.S.4 | ஒரு கிலோவிற்கு ரூ.4/= |
| | 4001.21.50 | --- | R.S.S.5 | ஒரு கிலோவிற்கு ரூ.4/= |
| | 4001.21.90 | --- | ஏனைய | ஒரு கிலோவிற்கு ரூ.4/= |
| | 4001.22 | -- | தொழினுட்ப ரீதியாக குறிப்பிடப்பட்ட இயற்கை றப்பர் | ஒரு கிலோவிற்கு ரூ.4/= |
| | | | (TSNR) | |
| 40.01 | 4001.29 | -- | ஏனைய: | |
| | | --- | மெல்லிய | |
| | 4001.29.13 | ---- | கபிலம் | ஒரு கிலோவிற்கு ரூ.4/= |

| | | | | |
|---|---|---|---|---|
| | 4001.29.14 | ---- | துண்டு | ஒரு கிலோவிற்கு ரூ.4/= |
| | 4001.29.20 | --- | றப்பர் துண்டுகள் | ஒரு கிலோவிற்கு ரூ.4/= |
| | 4001.29.30 | --- | குறைவாக நைற்ரஜன் உள்ள இயற்கை றப்பர்(LNNR) | ஒரு கிலோவிற்கு ரூ.4/= |
| | 4001.29.40 | --- | புரோட்டீன் அகற்றப்பட்ட இயற்கை றப்பர்(DPNR) | ஒரு கிலோவிற்கு ரூ.4/= |
| | 4001.29.50 | --- | MG றப்பர் | ஒரு கிலோவிற்கு ரூ.4/= |
| | 4001.29.60 | --- | SP றப்பர் | ஒரு கிலோவிற்கு ரூ.4/= |
| | 4001.29.70 | --- | ஏனைய இரசாயன ரீதியாக மாற்றம் செய்த நிலையிலுள்ள றப்பர் | ஒரு கிலோவிற்கு ரூ.4/= |
| | 4001.29.90 | --- | ஏனைய | ஒரு கிலோவிற்கு ரூ.4/= |
| | 4001.30 | - | பலற்ரா, கு(g)ற்ரா-பெர்ச்சா, கு(g)வேயுல், சிக்கில் மற்றும் ஒத்த இயற்கை பசைகள் | ஒரு கிலோவிற்கு ரூ.4/= |
| 41.01 | | | பதப்படுத்தாத தோல்கள், ஆட்டுத்தோல்கள் (எருமைத்தோல் உட்பட) அல்லது பாலூட்டிகள் (புதிய, உப்புச் சேர்த்து, உலர்த்திய, புளிப்புத்தன்மையாக்கப்பட்டு, ஊறவைக்கப்பட்டு அல்லது இல்லையெனில் பாதுகாக்கப்பட்ட, ஆனால் பழுப்பாக்கப்படாத, காகிதத் தோலால் உறையிட்ட அல்லது மேலும் தயாரிக்கப்பட்ட) கம்பளியாக்கப்பட்டதா இல்லையா அல்லது பிரிக்கப்பட்ட | |
| | 4101.20 | - | அனைத்து தோல்களும் மற்றும் தோல்கள், பிரிக்கப்படாத, சாதாரணமாக உலர்த்தப்பட்ட தோல் 8கிலோவிலும் கூடாமலுள்ள ஒவ்வொரு நிறைக்கும், உலர்ந்த உப்பானது 10கிலோ அல்லது புதிதாகவெனின் 16கிலோஇ ஈர உப்பு அல்லது இல்லையெனில் பாதுகாக்கப்பட்ட | 75% /ஒரு கிலோவிற்குரூ.500/= |
| | 4101.50 | - | அனைத்து தோல்களும் மற்றும் தோல்கள்,16கிலோவிலும் கூடிய | 75% /ஒரு கிலோவிற்குரூ.500/= |
| | 4101.90 | - | ஏனைய, துண்டுகள், வளைவுகள் மற்றும் வயிற்றின் பாகங்களை உள்ளடக்கிய | 75% /ஒரு கிலோவிற்குரூ.500/= |
| 41.02 | | | மூல நிலையிலுள்ள செம்மறி ஆடு அல்லது செம்மறி ஆட்டுக் குட்டியின் தோல், (புதிய, உப்புச் சேர்த்து, உலர்த்திய, புளிப்புத்தன்மையாக்கப்பட்டு, ஊறவைக்கப்பட்டு அல்லது இல்லையெனில் பாதுகாக்கப்பட்ட, ஆனால் பழுப்பாக்கப்படாத, காகிதத் தோலால் உறையிட்ட அல்லது மேலும் தயாரிக்கப்பட்ட), கம்பளியாக்கப்பட்டதா இல்லையா அல்லது பிரிக்கப்பட்ட, தவிர அவை குறிப்பு 1(c) ஆல் இவ் அத்தியாயத்திற்கு தவிர்க்கப்பட்ட | |
| | 4102.10 | - | கம்பளியுடன் | 75% /ஒரு கிலோவிற்குரூ.500/= |
| | | - | கம்பளியுடனில்லாத | |
| | 4102.21 | -- | ஊறவைக்கப்பட்ட | 75% /ஒரு கிலோவிற்குரூ.500/= |
| | 4102.29 | -- | ஏனைய | 75% /ஒரு கிலோவிற்குரூ.500/= |
| 41.03 | | | ஏனைய மூலத் தோல்கள் மற்றும் தோல்கள்,புதிய, உப்புச் சேர்த்து, உலர்த்திய, புளிப்புத்தன்மையாக்கப்பட்டு, ஊறவைக்கப்பட்டு அல்லது இல்லையெனில் பாதுகாக்கப்பட்ட, ஆனால் பழுப்பாக்கப்படாத, காகிதத் தோலால் உறையிட்ட அல்லது மேலும் தயாரிக்கப்பட்ட), கம்பளியாக்கப்பட்டதா இல்லையா அல்லது பிரிக்கப்பட்ட, தவிர அவை குறிப்பு 1(b) அல்லது 1(c) ஆல் இவ் அத்தியாயத்திற்கு தவிர்க்கப்பட்ட | |

| | | | | |
|---|---|---|---|---|
| | 4103.20 | - | ஊர்வனவின் | 75%/ஒரு கிலோவிற்குரூ.500/= |
| | 4103.30 | - | பன்றியின் | 75% /ஒரு கிலோவிற்குரூ.500/= |
| | 4103.90 | - | ஏனைய | 75%/ஒரு கிலோவிற்குரூ.500/= |
| 41.04 | | | பழுப்பாக்கப்பட்ட அல்லது மேல் ஓட்டு மூலத் தோல்கள் மறைவுகள்மற்றும் ஆட்டுத்தோல்கள் (எருமைத்தோல் உட்பட) அல்லது பாலூட்டிகள், முடியில்லாத, பிரிக்கப்பட்டதா இல்லையா ஆனால் தயாரிக்கப்படாத | |
| | | | ஈரமான நிலையில் (Wet-Blue உட்பட) | |
| | 4104.11 | -- | முழுத்தானியங்கள்; பிரிக்கப்படாத; பிரிக்கப்பட்ட தானியம்: | |
| | 4104.11.10 | --- | Wet-Blue chrome - பழுப்பாக்கப்பட்ட | 10% |
| | 4104.11.90 | --- | ஏனைய | 10% |
| | 4104.19 | -- | ஏனைய | |
| | 4104.19.10 | --- | Wet-Blue chrome - பழுப்பாக்கப்பட்ட | 10% |
| | 4104.19.90 | --- | ஏனைய | 10% |
| | | | உலர் நிலையில் (மேல் ஓடு): | |
| | 4104.41 | -- | முழுத்தானியங்கள்; பிரிக்கப்படாத; பிரிக்கப்பட்ட தானியம்: | 10% |
| | 4104.49 | -- | ஏனைய | 10% |
| 41.05 | | | பழுப்பான அல்லது செம்மறி ஆடு அல்லது செம்மறி ஆட்டுக் குட்டியின் மேல் ஓட்டு தோல், கம்பளியுடனில்லாத, பிரிக்கப்பட்டதா இல்லையா ஆனால் மேலும் தயாரிக்கப்படாத | |
| | 4105.10 | - | ஈரமான நிலையில் (Wet-Blue உட்பட) | 10% |
| | 4105.30 | - | உலர் நிலையில் (மேல் ஓடு): | 10% |
| 44.03 | | | வெறுமனே மரம், பட்டை நீக்கப்பட்டதா இல்லையா அல்லது சக்கை அல்லது வெறுமனே சதுரமாக்கப்பட்ட | |
| | | - | ஏனைய | |
| | 4403.99 | -- | ஏனைய | 15% |
| 72.04 | | | இரும்புக் கழிவு மற்றும் தூள்: இரும்பு அல்லது உலோகத் துண்டுகளின் உருகிய நிலையிலுள்ள தூள் | 10% |
| | 7204.10 | - | இரும்புத் தாதின் கழிவு மற்றும் தூள் | 10% |
| | | | கலப்புலோகத்தின் கழிவு மற்றும் தூள் | |
| | 7204.21 | -- | துருப்பிடிக்காத உலோகத்தின் | 10% |
| | 7204.29 | -- | ஏனைய | 10% |
| | 7204.30 | - | தகரஇரும்பின் அல்லது உலோகத்தின் கழிவு மற்றும் தூள் | 10% |
| | | - | ஏனைய கழிவு மற்றும் தூள் | 10% |
| | 7204.41 | -- | சீவல்கள், குப்பைகள், சில்லுகள;, துருவல் கழிவுகள், மரத்தூள், அரக்கழிவுகள், நறுக்கல்கள் மற்றும் முத்திரைகள், தொகுப்பாகவோ அல்லது இல்லையா | 10% |
| | 7204.49 | -- | ஏனைய | 10% |
| | 7204.50 | - | உருகிய நிலையிலுள்ள துண்டுகளின் தூள் | 10% |
| 74.04 | 7404.00 | | செப்பின் கழிவு மற்றும் தூள் | 50% |
| 75.03 | 7503.00 | | நிக்கலின் கழிவு மற்றும் தூள் | 25% |
| 76.02 | 7602.00 | | அலுமினியத்தின் கழிவு மற்றும் தூள் | 25% |
| 78.02 | 7802.00 | | ஈயத்தின் கழிவு மற்றும் தூள் | 25% |
| 79.02 | 7902.00 | | நாகத்தின் கழிவு மற்றும் தூள் | 25% |
| 80.02 | 8002.00 | | தகரத்தின் கழிவு மற்றும் தூள் | 25% |

### c) சுங்கப் பரிசோதனை

பிரதான ஏற்றுமதி அலுவலர் செய்யப்பட வேண்டிய பரிசோதனை முறையை முடிவு செய்வார். இது ஏற்றமதியாளரின் வளாகத்தில்/ களஞ்சியம்/ சரக்கு கொண்டிருக்கும் நிலையத்தில் நடாத்தப்பட வேண்டும். அவர் தேவையான முத்திரையை சுங்க பிரகடனத்தில் இடுவார்: "பரிசோதனைக் குழு" அல்லது "பரிசோதனை செய்யப்பட வேண்டிய சரக்கு"அல்லது "சரி பார்க்க வேண்டிய முத்திரைகள்"முதலியவை. பரிசோதனை தேவையில்லை என பிரதான ஏற்றுமதி அலுவலர் கருதின், சரக்கை பரிசோதனையிலிருந்து விலக்குவார். அவர் சுங்க பிரகடனத்தில் "விலக்கப்பட்டது" என முத்திரையை இடுவார் அத்துடன் வழங்கும் பிரிவிற்கு அதனை அனுப்புவார்.

## 12. துறைமுக நடைமுறைகள்

### a) துறைமுகக் கட்டணங்கள்

துறைமுகத்திற்குப் பொருட்களை அனுப்புவதற்கு முன் இலங்கை துறைமுக அதிகார சபையின் நிதிப் பிரிவிற்கு துறைமுக கட்டணங்களை செலுத்த வேண்டும். இக்கட்டணங்களை செலுத்துவதற்கு, நிறைவுற்ற கப்பற் தொகுதிக் குறிப்பின் 3 பிரதிகள்(EXP 3a) இப்பிரிவிற்கு சமர்ப்பிக்க வேண்டும். கட்டணங்கள் செலுத்தப்பட்ட பின், நிதி முகாமையாளர் ஒரு பிரதியை வைத்துக்கொண்டு ஏற்றுமதியாளரிற்கு 02 பிரதிகளை வழங்குவார். கட்டணங்கள் செலுத்தப்பட்ட கப்பற் தொகுதியின் பிரதிகள் என அழைக்கப்படும். இக் கட்டணங்கள் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி பரிவர்த்தனையை கையாளும் போது இலங்கை துறைமுக அதிகார சபையால் சேவை வழங்கப்படும் அனைத்து துறைமுகங்களிற்கும் பொருந்தும்.

இக் கட்டணங்கள் பின்வரும் தலைப்புகளின் கீழ் வகைப்படுத்தப்பட முடியும்:

1. இறங்கும் மற்றும் வழங்கும் கட்டணங்கள்
2. கப்பலிற்கான கட்டணங்கள்
3. பிணைப்பு மற்றும் பொருள் வைக்கும் இடக் கட்டணங்கள்
4. பாரந்தூக்கிக்கான கட்டணங்கள்
5. வைத்திருப்பதற்கான கட்டணங்கள் (வாடகை)
6. சேவைகளுக்கான துணைக் கட்டணங்கள், கோரப்படுமாயின்

### b) துறைமுகத்திற்கு சரக்கை மாற்றுதல்

துறைமுகத்திற்கு சரக்கை வழங்கும் போது பின்வரும் ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு அத்துடன் இலங்கை துறைமுக அதிகார சபையின ஏற்றுமதி அலுவலகத்திற்கு(SLPA) அல்லதுJCT சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

i. கப்பற் தொகுதிக் குறிப்பு(Exp. 3a விண்ணப்பம்)
   - 05 பிரதிகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்

ii. சரக்கு அனுப்பும் (Exp. 3b விண்ணப்பம்)(CDNவிண்ணப்பம்)
   - 06 பிரதிகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்

இதற்கு மேலதிகமாக, கப்பற் தொகுதிக் குறிப்பு (SLPA கட்டணப் பிரதி) மற்றும் சுங்கப் பிரகடன விண்ணப்பமும் (பாதுகாப்பு பிரதி) இணைக்கப்பட்டிருக்கப் பட்டிருத்தல் வேண்டும்.

இலங்கைத்துறைமுக அதிகார சபையின் ஏற்றுமதி அலுவலகத்தில் பதிவு செய்தல் மற்றும் சரக்கு/ தாங்கியின் கண்காணிப்பின் பின்னர் ஏற்றுமதியாளர் சரக்கை படகுத்துறைக்கு எடுத்துச் செல்லுமாறு கோரப்படுகிறார்.

அனைத்து சரக்கு/ தாங்கிகள் ஏற்றப்பட்ட பின்னர்,கப்பற் தொகுதிக் குறிப்பு கப்பலின் மாலுமி கையெழுத்திடும் போது துணைப் பற்றுச்சீட்டிற்கு மாற்றப்படும். சபையிலுள்ள இ.து.அ.ச அலுவலர், கப்பல் ஏற்றுமதி அலுவலகத்திற்கு துணைப் பற்றுச்சீட்டினை அனுப்புவார்.

ஏற்றுமதியாளர் துணைப் பற்றுச்சீட்டின் பிரதியை இ.து.அ.சபையிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் அத்துடன் கப்பல் முகவரிடம் கப்பல் சரக்கிற்கான பற்றுச்சீட்டை பெறுவதற்கு அதனைச் சமர்ப்பிப்பார். இந்நிலையில் ஏற்றுமதியாளர் சரக்குக் கட்டணங்களை(பொருத்தமான இடங்களில்) கப்பல் விற்பனையாளரிற்கு செலுத்துமாறு கோரப்படுவார்.

## 13. வர்த்தக வங்கிக்கு ஆவணங்களைச் சமர்ப்பித்தல்

கப்பற் தொகுதியின் இறுதி நிலை வங்கிக்கு ஆவணங்களை சமர்ப்பித்தலாகும். அவையாவன:

- வர்த்தக விலைப்பட்டியல்
- இறங்குவதன் மூலப் பற்றுச்சீட்டு / A.W.B. இல.
- காப்புறுதிக் கொள்கை ()
- பரிமாற்றத்திற்கான பற்றுச்சீட்டு (DP அல்லது DA நிபந்தனைகளிலிருந்தால்)
- கடன் கடிதம்
- தோற்றச் சான்றிதழ்/ GSP சான்றிதழ்
- பொதியிடும் பட்டியல்

வாங்குவோரின் கோரிக்கைக்கேற்ப பின்வரும் ஆவணங்களும் சமர்ப்பிக்கப்பட வேண்டும்;

- தரச் சான்றிதழ்
- சுகாதாரச் சான்றிதழ்
- தாவர சுகாதாரச் சான்றிதழ்
- புகையூட்டல் சான்றிதழ்
- HACCP சான்றிதழ் (உணவுப் பதார்த்தங்களுக்கானது)
- வேறு ஏதாவது சான்றிதழ்கள் / Global GAP போன்ற பரிசோதனை அறிக்கைகள் / GMP

a) கடன் கடித அடிப்படையில் ஏற்றுமதி செய்தல் (L/C நிபந்தனைகள்)
இக் கப்பற் தொகுதிக்கான கடன் கடிதம் பெறப்பட்டதெனின், அனைத்துக் கப்பற் தொகுதி ஆவணங்களும் ஏற்றுமதியாளரின் வங்கிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஏற்றுமதியாளர் கடன் கடிதத்தில் வரையறுக்கப்பட்ட அனைத்து நிபந்தனைகளும் நிறைவேற்றப்பட்டுள்ளனவா என உறுதி செய்து கொள்ள வேண்டும். இந் நிலையில் ஆவணங்கள் பற்றிப் பேச்சு வார்த்தை செய்து கொள்ள முடியும் அத்துடன் ஏற்றுமதியாளர் இக் கப்பற் தொகுதிக்கான பணத்தை பெற்றுக் கொள்ளலாம். மேற்குறிப்பிட்ட ஆவணங்களின் பிரதிகள் வாங்குபவரிற்கு இயலுமான வரையில் விரைவாக அனுப்புப்பட வேண்டும்.

b) கட்டணத்திற்கெதிரான ஆவணங்களின் அடிப்படையில் ஏற்றுமதி செய்தல் (DP நிபந்தனைகள்)
ஒப்பந்தமானது கட்டணத்திற்கெதிரான ஆவணங்களின் அடிப்படையிலானது எனின் (DP நிபந்தனை) பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்ட பின்னர் பரிமாற்றத்திற்கான பற்றுச்சீட்டு (Sight Bill) கப்பற் தொகுதி ஆவணங்களுடன் வாங்குபவரின் வங்கிக்கு கட்டணத்திற்காக இறக்குமதியாளரால் அனுப்புபட்டிருக்க வேண்டும்.

c) ஒப்புதலிற்கெதிரான ஆவணங்களின் அடிப்படையில் ஏற்றுமதி செய்தல் (DA நிபந்தனைகள்)
ஒப்பந்தமானது ஒப்புதலிற்கெதிரான ஆவணங்களின் அடிப்படையிலானது எனின் (DA நிபந்தனைகள்) பரிமாற்றத்திற்கான பற்றுச்சீட்டு (Terms Bill) கப்பற் தொகுதி ஆவணங்களுடன் வாங்குபவரின் வங்கிக்கு ஏற்றுக்கொள்வதற்காக இறக்கு மதியாளரால் அனுப்பப்பட்டிருக்க வேண்டும்.